**தலைப்பு 159 – சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 159 – சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்னர் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | 1. எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை | 2.1.1 |
| | | 2. உள்நாட்டு செயற்திட்டங்களில் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை | 2.2.1 |
| | | 3. முகாமைத்துவ நலிவுகள் | 2.3 |
| | | 4. செயற்திட்டத்தை அமுல்படுத்துவதனால் சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் | 2.2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.4(ஆ) |
| | | 2. கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.4(இ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை | 2.5 |

## 2 போதியளவான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

#### 2.1.1 எதிர்பார்த்த மட்டம் அடையப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட 06 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 63 பல்வேறு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 728 மில்லியன் நிதிஏற்பாட்டில் ரூபா 258.61 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 03 பணிப்பொறுப்புக்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 603 மில்லியன் நிதிஏற்பாட்டில் ரூபா 168.33 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2 அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 678 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 229.1 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 448.87 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 66.2 சதவீதம் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.1 உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூக சுற்றுலா அபிவிருத்திக்காக (சுற்றுலா கிராம அபிவிருத்தி) 2017 இன் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 25 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டின் போது ரூபா 0.55 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் இந்த செயற்திட்டத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவரும் வகையில் கொள்கை செயல்வழி / வழிகாட்டலொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் ராஜகந்துலுவ மானச்சேரி ஈஸ்வர கோயிலுக்காக மலசலகூட முறையொன்றை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நிலம், தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியாக இருந்ததுடன், நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர், உரிய காணியின் உரித்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மலசலகூட முறைமை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,629,260 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு 2018 மே 03 ஆந் திகதியளவில் அதில் ரூபா 3,777,465 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) குருணாகல் மாவட்டத்தில் யாபகூவ றஜமஹா விகாரையில் மின்விளக்கு முறைமையொன்றைத் தயாரிப்பதற்காக ரூபா 9,790,000 தொகையான வேலைப் பெறுமதியில் தனியார் கம்பனியொன்றுடன் 2017 நவம்பர் 13 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு அதில் ரூபா 7,855,600 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரினால் மின்னல் தடுப்பு பொருத்தப்படாமை மற்றும் மின்சார முறைமை என்பவற்றுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 1,340,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் பௌதீக பரிசோதனைத் திகதியான 2018 ஏப்ரல் மாதம் வரையிலும் செயற்திட்டம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. மேலும், இந்த செயற்திட்டத்தின்கீழ் சோலோ.பீ.வீ மொடியூல் முறைமை பொருத்துவதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,769,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த முறைமை மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்பட முடியாமையினால் அந்த பணிகளிலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

### 2.2.2 செயற்திட்டத்தால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோர எல்லைக்கு அடுத்தால் அமைந்துள்ள சல்லிதீவு பிரதேசத்தை கேந்திரமாக்கும் நோக்கின் கீழ் Leisure &Pleasure Pristine Eco Culture என்ற தலைப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சுற்றுலா மேம்பாட்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது அதற்காக இலங்கையின் கரையோர பிரதேசங்களில் நிர்மாணித்தல் தொடர்பாக நிறுவன ரீதியான பொறுப்பைக் கொண்டுள்ள கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் மாவட்ட காணி கையாளல் ஆணைக்குழு என்பவற்றிலிருந்து செயற்திட்டத்திற்குரிய காணிகளை வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. சல்லிதீவு போன்ற சுற்றாடல் பிரதேசங்களின் தரத்தை மேலோங்கச் செய்யும் பிரதேசமாக நிர்மாணிக்கும் செயற்பாடுகளின் போது, சுற்றாடல் சாத்தியவள ஆய்வு மற்றும் ஆரம்ப சூழலை இனங்கண்டு அந்த அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த செயற்திட்டத்திற்கு இணையாக அமுல்படுத்தப்பட வேண்டிய கழிவுப்பொருள் முகாமைத்துவ உப செயற்திட்டத்திற்காகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் போபத் எல்லையை அண்மித்த சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக சபரகமுவ மாகாண சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்துடன் 2017 யூலை 19 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், மாகாண சுற்றுலாத்துறை அமைச்சினால் அப்பணிகள் தொடர்பாக சரியான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழகத்தால் செயற்திட்ட அறிக்கையும் குறித்த திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 359,000 தொகையான மதியுரைக்கட்டணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் 80 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதலேகம மலையை அண்மித்த பகுதியில் சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 6,823,764 தொகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 2,627,458 தொகை அதாவது 39 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. ரூபா 2,800,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த பதலேகல சுற்றுலா நிலையத்தின் வாகனத் தரிப்பிடம்

மற்றும் படிக்கட்டுக்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் நிறைவேற்றப்படாமையினால் வீதி அபிவிருத்திக்கான வேலை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் வரையில் அறநாயக்க பிரதேச செயலகத்தால் அந்த வீதிகளின் ஒரு பகுதி (50 மீற்றர் நீளம் அளவில்) கொங்கிறீட் இடப்பட்டு பூர்த்தி செய்யப்படாமையினால் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைப்பகுதி குறைந்திருந்தமையால் அந்த நிதிஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது.

(இ) கீரிமலை பிரதேசத்தில் ஆண் மற்றும் பெண் குளியலறைகளை திருத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,395,789 தொகை ஒதுக்கப்பட்டு உரிய செயற்பாடுகள் 2017 நவம்பர் 15 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும், 2018 மார்ச் 06 ஆந் திகதி வரையிலும் அந்த வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள பொறியியலாளர் போன்றோரினால் உரிய வேலை நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 27 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 98,512 தொகையான தாமதக்கட்டணத்தையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 31 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களிலிருந்து 448,104 கிலோ மீற்றர்கள் ஓடப்பட்டிருந்ததுடன் அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்களுக்காக ரூபா 6,987,468 தொகையும், வாகன சேர்விஸ் செய்வதற்காக ரூபா 2,404,658 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 8,937,728 தொகையும் மற்றும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்காக ரூபா 4,135,699 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 22,465,553 செலவிடப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் அமைச்சினால் வாகனங்களை ஓட்டுவதற்காக சாரதி சம்பளம், மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 50.13 செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தென் மாகாணத்தில் அகுறல கரையோரத்தில் நடமாடும் பொது மலசலகூடவசதி முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக றுஹுனு சுற்றுலா பணியகத்தின் மூலம் ரூபா 1,103,182 தொகை செலுத்தப்பட்டு 2017 ஒக்தோபர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் சேவை அலகொன்று அம்பலாங்கொடை பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தது. இதனைத் தாபித்த இடம் தீர்க்கப்படாதிருந்தமையால் 2018 பெப்ரவரி மாதத்தில் கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த அலகு விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் அக்கரை கரையோரப் பிரதேசத்தை அழகுபடுத்தல் மற்றும் மேம்படுத்தும் அபிவிருத்தி செயற்திட்டம் - 2017 இன் கீழ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அக்கரை கரையோரப் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக வாகனத் தரிப்பிடமும், நிழல் வழங்கும் கூடாரங்களையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 2,598,307 தொகை செலவில் வேலை பூர்த்தி

செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்கள் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 06 வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உடன்படல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காத வகையில் 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15.9 மில்லியன் நிதிஏற்பாடு ரூபா 0.82 மில்லியனால் விஞ்சி ரூபா 0.86 மில்லியன் தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக அமைச்சினால் சீரமைக்கப்படாதிருந்த பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.3(அ)(i) | தனியார் நிறுவனமொன்றிற்கு மாதாந்தம் செலுத்த வேண்டிய இணையத்தள வசதிகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டிய தரப்பினர் தொடர்பாகவும், செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது தீர்மானிக்கப்படாமையினால் ரூபா 1.08 மில்லியன் செலவில் எல்ல நகரத்தில் 04 இடங்களில் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட CCTV கெமரா முறைமை 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. |
| 2016 | 3.3(ஆ)(ii) | கெமரா முறைமைக்காக வழங்கப்பட்டிருந்த 02 வருட உத்தரவாதக் காலத்தில் 01 வருடமும் 08 மாதங்களும் முடிவடைந்திருந்ததுடன் கெமரா முறைமையில் ஏற்படக்கூடியதாக இருந்த வழுக்களைத் திருத்தும் இயலுமை கைவிடப்பட்டிருந்தது. |

## 2.7 செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டெழுபவை | 56.0 | 43.3 | 12.6 | 22.5 |
| | மூலதனம் | 113.0 | 21.1 | 91.8 | 81.2 |
| | **மொத்தம்** | **169.0** | **64.4** | **104.4** | **61.7** |
| 2016 | மீண்டெழுபவை | 118.2 | 115.0 | 3.2 | 2.7 |
| | மூலதனம் | 624.3 | 273.3 | 351.0 | 56.2 |
| | **மொத்தம்** | **742.5** | **388.3** | **354.2** | **47.7** |
| 2017 | மீண்டெழுபவை | 190.0 | 151.1 | 38.9 | 20.4 |
| | மூலதனம் | 923.8 | 273.6 | 650.1 | 70.3 |
| | **மொத்தம்** | **1113.8** | **424.7** | **689.1** | **61.8** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் ஏனைய நிறுவனத்தால் நிறைவேற்றுதல்**

அமைச்சரினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளுக்காக ரூபா 568 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்துடன், அந்த மொத்த பணிப்பொறுப்புக்களும் மாகாண சபைகள் மற்றும் மாவட்ட செயலக வழிகள் மூலம் நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும், அந்த நிறுவனத்திற்கிடையே சிறப்பான தொடர்பாடல் இன்றி அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதிஏற்பாட்டில் ரூபா 405 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை**

03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1.1 மில்லியன் தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடுகளில் எந்தத் தொகையும் பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை**

18 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 682.5 மில்லியன் தொகையான மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 278.5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையினால் சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 31.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 583,153 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 32 | 24 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| (v) | ஏனையவை | 01 | 01 | - |
| | மொத்தம் | 71 | 54 | 17 |

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது அமைச்சில் நிதிப்பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்டுள்ள சுயமான கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தமது அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று தாபிக்கப்பட வேண்டியிருந்தமை நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய விடயப் பகுதிகளில் 16 பிரிவுகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது 03 உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்ருந்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 760,683,000 தொகையில் ரூபா 618,000,000 அதாவது 81 சதவீதம் சுற்றுலா அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டதாகக் காண்பித்து அதற்காக சகல காலாண்டிலும் 40 மனிதவலு மணித்தியால வீதம் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டின்போது சுற்றுலா அபிவிருத்தி தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகள், பௌதீக பரிசோதனையொன்றேனும் அல்லது ஆவணங்களின் பரீட்சிப்பொன்றேனும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்படவில்லை.